# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai

OS No. 70/2016

Deposition of witness for வா.சா. 1

Name and Age : கணபதி

Father's/Husband Name :

Village and Taluk :

Caste and Religion :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of (31.07.2025)

குறுக்குவிசாரணை

நான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாய வேலை செய்கிறேன். விவசாய வேலை செய்து கொண்டு காண்டிரக்டிரிடம் டிரைவராக வேலை செய்கிறேன். எனது அப்பாவிற்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். மூத்த மனைவி பெயர் வெள்ளத்தாய். அவருக்கு பேச்சிமுத்து என்ற மகனும், சுப்பம்மாள் என்ற மகளும் வாரிசுகள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். பேச்சிமுத்துவிற்கு மூக்கையா, சிவணு, ஆறுமுகம், இசக்கி என்ற நான்கு ஆண்வாரிசுகள், ஒரு பெண் வாரிசு உண்டு என்றால் சரிதான். அவர்களில் தற்போது ஆறுமுகமும், இசக்கி மட்டும் தான் உயிரோடு உள்ளார்கள் என்றால் சரிதான். சுப்பம்மாளுக்கு குத்தாலிங்கம், ஆறுமுகம் ஆகிய ஆண்வாரிசுகளும், வெள்ளத்தாய், இந்திராணி என்ற பெண் வாரிசுகளும் உண்டு என்றால் சரிதான். அதில் வெள்ளத்தாய் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தாயார் பெயர் அருணாச்சலவடிவம்மாள் என்றால் சரிதான். அவர் எனது தகப்பனாருக்கு இரண்டாவது மனைவி என்றால் சரிதான். என்னுடன் வெள்ள பாண்டி, முருகையா என்ற இரண்டு ஆண் வாரிசுகளும், கணபதி அம்மாள், செண்டு என்ற படைவீட்டாள் மற்றும் லட்சுமி என்ற பெண் வாரிசுகளும் உண்டு என்றால் சரிதான். சுப்பையா என்ற தாய் மாமாவும் உண்டு என்றால் கிடையாது.

எனது தகப்பனாருக்கு பண்பொழி கிராமத்தில் பழைய கதவு எண் 101, புதிய கதவு எண் 34 என்ற பூர்வீக வீடு உண்டு என்றால் இல்லை. அப்படி ஒரு வீடு உண்டு. அந்த வீட்டில் தான் எனது அப்பாவும், அம்மாவும் குடியிருந்து வந்ததாக வாதி சொல்கிறார் என்றால் சரியல்ல. எனது தாயார் எப்போது இறந்தார் என்றால் 1997 இல் இறந்துவிட்டார். எனது தாயார் இறந்ததற்கு இறப்பு சான்றிதழ் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சான்றிதழ் எதுவும் எடுக்கவில்லை, சொத்தானது வழக்குரை தபசில் சொத்தானது வா.சா.ஆ.1, 1948 ஆம் வருட கிரைய ஆதரவுப்படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 1976-ல் எனது தகப்பனார் உயில் எழுதும் பொழுது எனது தாயாரை இரண்டாவது மனைவி என்று தான் காட்டியுள்ளார் என்றால் சரிதான். இந்த விவரங்கள் எதையும் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சொல்லாமல் விட்டதற்கு தனிப்பட்ட காரணங்கள் எதுவும் உண்டா என்றால் இல்லை.

வழக்குரை தபசில் சொத்து வா.சா.ஆ.1 அடிப்படையில் மொத்த விஸ்தீரணம் 41 சென்ட் என்றால் சரிதான். 41 சென்ட் கிழமேலாக ஒரே அடியாகத்தான் உள்ளது என்றால் சரிதான். புஞ்சை நிலம் ஆகும், கீழ்ப்பக்கம் 23 சென்ட், மேல்பக்கம் 18 செண்ட் கிரயம் பெற்றார். மொத்த விஸ்தீரணம் 41 செண்டையும் எனது அப்பா இறக்கும்வரை எந்த விதமான ஆவணமும், யாருக்கும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, எனக்கு எழுதி கொடுத்துள்ளார். 25/2 ல் 23 சென்ட் எனக்கு எழுதி கொடுத்துள்ளார். என்னிடம் காட்டப்படும் EC-ல் 1967 முதல் 1987 வரை எனது தகப்பனார் சொத்தை பொருத்து எந்த வில்லங்கமும் செய்யவில்லை என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு உயில் மூலம் எழுதி கொடுத்துள்ளார். நான் வழக்கறிஞர் வீ.கே.சுப்பிரமணியன் மூலமாக பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு 15.08.2015 தேதியில் அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.1** ஆகும். அந்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் வழக்கறிஞர் முத்துக்குமாரசாமி மூலமாக பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் எனக்கு தெரியாது.

எனக்கு தகப்பனார் உயில் மூலமாக எனக்கு சொத்தினை பாத்தியப்படுத்தி கொடுக்கும் போது நான் மைனர் என்றால் சரிதான். அந்த விவரம் எனது அம்மா சொல்லித்தான் எனக்கு தெரியும். நான் 2015 ஆம் வருடம் எனது மகனுக்கு வழக்குரை சொத்தைப் பொறுத்து ஒரு ஏற்பாட்டு ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ஏற்பாடு ஆவணம் என்னைக்கு ஏற்படுத்திக் கொடுத்தேனோ அன்னைக்கே சொத்தினை எனது மகனின் அனுபவத்திற்கு கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். அந்த ஏற்பாட்டு ஆவணத்தில் உள்ள தேதியிலிருந்து இந்த வழக்குரை சொத்தில் எந்தவித உரிமையும் எனக்கு

இல்லை என்றால் சரிதான், என் பையனுக்கு எழுதி கொடுத்து விட்டேன். எனது பையனுக்கு ஏற்கனவே எழுதிக் கொடுத்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு எனக்கு அருகதை இல்லை என்றால் அதற்கு முன்பு எழுதி கொடுத்துவிட்டேன். எந்த வருடம் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. எனது பையனுக்கு ஏற்பாட்டு ஆவணம் எழுதிக் கொடுப்பதற்கு முன்பே ஒரு ஆவணம் எழுதி கொடுத்துள்ளது இந்த வழக்கில் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் இல்லை.

நான் 1995 ஆம் வருடம் முதல் கேரளாவில் காய்கறி வியாபாரம் செய்து வந்ததற்கு எந்த விதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கேரளா போவேன், வியாபாரம் செய்தேன். 2002 இல் இருந்து கேரளாவில் குடியிருந்ததற்கு எந்தவிதமான ஆவணமும் இல்லை என்றால் இல்லை. நான் ரப்பர் பேட்டரியில் குடியிருந்தேன். ஒண்ணாம் பிரதிவாதி எனது அக்கா என்றால் சரிதான். நான் எனது பையனுக்கு ஒரு ஏற்பாடு ஆவணம் எழுதி வைப்பதற்கு முன்பே ஒன்னாம் பிரதிவாதி அவரது பையனுக்கு 2014 ஆம் வருடம் ஒரு ஏற்பாட்டு ஆவணம் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான். ஒண்ணாம் பிரதிவாதி எழுதி வைத்த ஏற்பாடு ஆவணத்தில் உள்ள வீட்டில் மின் இணைப்பு பகுதி உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. பஞ்சாயத்தில் வரிவிதிப்பும், ஒன்னாம் வாதி பெயருக்கு ஏற்பட்டுள்ளது, அந்த விவரமும் எனக்கு தெரியாது. மோசடி செய்துவிட்டார். இது சம்பந்தமாக மின்சாரத்துறைக்கோ, பஞ்சாயத்திற்கோ எந்தவித அறிவிப்பும் நான் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான், வாய் மூலமாக சொன்னேன்.

எனது அக்காவிற்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் அது எனக்கு தெரியாது. அதனால் எனது அக்காவிற்கு திருமணத்தின்போது சீர்வரிசையில் எதுவும் கொடுக்கப்பட்டதா என்பது எனக்கு தெரியாது, அப்போது நான் சின்ன பையன், நான் பிறக்கும் பொழுது எனது தகப்பனாருக்கு 69 வயது. எனக்கும், எனது சகோதரிக்கும் கருத்து வேறுபாடு கிடையாது என்றால் சரிதான். எனது அனுமதியின் பேரில் மூணாவது இலக்க சொத்தில் பிரதிவாதிகள் குடியிருந்து வரவில்லை என்றால் சரியல்ல. என்னிடமும், எனது அம்மாவிடம் தான் கேட்டார்கள், எனது அனுமதியின் பேரில் குடியிருந்து வரவில்லை என்றால் சரியல்ல. உயில்படி உள்ள 23 சென்ட் தான் வழக்குரையில் ஒண்ணாம் இலக்க சொத்தாக கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 1வது லக்கமாக காட்டப்பட்டுள்ள சொத்தை எனது மனைவி படைவீட்டாளுக்கு 2005 ஆம் வருடம் ஒரு ஏற்பாட்டு ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எனது மனைவிக்கு ஏற்பாட்டு ஆவணம் மூலம் சொத்தில் ஒரு வீடு கட்டி உள்ளார் என்றால் சரிதான். எனது மனைவிக்கு

ஏற்பாட்டு ஆவணம்  மூலம் கொடுத்த சொத்திற்கு வலப்பக்கம் தான் பிரதிவாதிக்கு பாத்தியமான இடம் உள்ளது என்றால் சரிதான்.

மொத்தமுள்ள 23 சென்ட் எனது மனைவிக்கு 3 சென்ட் போக மீதமுள்ள 17 சென்ட் பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் இல்லை. வழக்குரையில் இரண்டாம் தபசில் 3 செண்ட், அதுபோக பிரதிவாதிகள் குடியிருக்கும் 3 செண்ட் போக மீதமுள்ள 23.47 என வழக்குரையில் கூறியிருந்தால் தவறு என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் கூறியுள்ளபடி பிரதிவாதிகள் எனது அனுமதியின் பேரில் குடியிருக்க வில்லை என்றாலும், மாட்டு தொழுவம் எதுவும் அதில் வைக்கவில்லை, அந்த இடத்தில் பிரதிவாதிகள் அவர்களது சொந்த முதல் கொண்டு தான் வீடு கட்டி உள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த உண்மை விவரங்கள் தெரிய கூடாது என்பதற்கு தான் ஆணையர் வந்து சொத்தினை பார்வையிடும்போது அளக்கக்கூடாது என்று மெமோ கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனது தாயார் உயிருடன் இருக்கும் போது ஒண்ணாம் பிரதிவாதிக்கு 3 சென்ட் விட்டுக் கொடுக்கப்பட்டு அதில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் அந்த இடத்தை தட்டிப் பறிக்க வேண்டும் என்பதற்காக வீண் கட்சி செய்து, வம்பு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி அல்ல. அதனால்தான் பிரதிவாதிகள் எதிர்கோரிக்கை வழக்கு தாக்கல் செய்து, பரிகாரம் கோரியுள்ளது கிடைக்க தக்கதல்ல என எதிர்வாதம் செய்யவில்லை என்றால் சரியல்ல. உண்மை விவரங்களை மறைத்து, தவறான தகவலை கொடுத்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.07.31 19:47:37 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai